# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040882

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல் நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 04/2024 | Date: நாள் 25.04.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended by The Prevention Corruption (Amendment) Act 2018 | Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 24.04.2024 | Date to : நாள் வரை 24.04.2024
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 16.00 hrs | Time to : நேரம் வரை 21.00 hrs
   (b) Information Received at P.S. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.04.2024 | Time : நேரம் 1145 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I | Time : நேரம் 1145 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கட்டச்சு புகார் மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 50 கி.மீ. தென்மேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி சேத்தியாதோப்பு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- | District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இரா.சுமித்ரா | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இராஜேந்திரன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 45 | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —— | Place of Issue : வழங்கப்பட்ட இடம் ——
   (f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர் | (g) Address : முகவரி கடலூர், .விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் .

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு.தி.சீனிவாசன், வயது 56, த/பெ, தியாகராஜன், செயல் அலுவலர், தேர்வுநிலை பேரூராட்சி, சேத்தியாத்தோப்பு, கடலூர் மாவட்டம்.
   2) திரு.பெ.பூங்குழலி, வயது 55, த/பெ, பெரியசாமி, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர்.
   3) திரு.க.விஜயலட்சுமி, வயது 43, க/பெ, ஆ.ஞானப்பிரகாசம், ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   தாமதம் இல்லை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 25.04.2024 ஆம் தேதி காலை 11.45 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, இரா.சுமித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புனர் இரா.சுமித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியரகம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க.எண்.அ/225/2024 நாள் 25.04.2024 அய்யா, பொருள் : திடீர் ஆய்வு

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

S.THIRUVANGADAM

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ..............................
Rank: நிலை .................... No. எண் ..........
Inspector of Police,
V&AC, Cuddalore.

சோதனை – சேத்தியாதோப்பு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்க பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – தொடர்பாக, கடலூர். விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் துணை ஆய்வுக்குழு அலுவலரான இரா.சுமித்ரா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பு பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற உள்ளூர் நிதி தணிக்கை முன்னிட்டு 24.04.2024 அன்று உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர் அவர்களால் மேலாய்வு நடைபெறுவதாகவும், மேலாய்வு செய்யும் உதவி இயக்குநர் மற்றும் ஆய்வாளர் அவர்களுக்கு லஞ்சப்பணம் கொடுத்து தணிக்கை சுமூகமாக முடிப்பதற்கு சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலக செயல் அலுவலர் திரு. சீனுவாசன் அவர்கள் தயார் நிலையில் இருப்பதாக இரகசிய தகவல் எனக்கு கிடைத்தது. பின்னர் உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மாலை சுமார் 11.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த காவல் ஆய்வாளர் திரு.சு.திருவேங்கடம் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி சேத்தியாதோப்பு தேர்நிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு சென்றால் அங்கு சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் உதவி இயக்குநர், தணிக்கை, கடலூர் அவர்களுக்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், காவல் ஆய்வாளர் திரு.சு.திருவேங்கடம் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மதியம் சுமார் 01.30 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கிழக்கு மேற்காக செல்லும் வடலூர் – கும்பகோணம் சாலையில் சேத்தியாதோப்பு வீராணம் திட்டம் ரோட்டில் வடக்கே உள்ள சாலையில் அமைந்துள்ள சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்திற்கு சற்று தொலைவில் வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 4.00 மணிக்கு தெற்கு பார்த்து

இ. [signature]
25/4/24

அமைந்து இருக்கும் சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலக வளாகத்திற்கு சென்று மெயின் கேட்டை அடைத்து பாதுகாப்பிற்கு காவலரை நியமித்து பின்னர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். பிரதான வாயிலின் இடது புறம் உள்ள மூன்றாவது அறை செயல் அலுவலர் அறை என்று தெரிந்துகொண்டு அந்த அறைக்கு சென்றோம். அங்கு ஒரு ஆண் நபர் நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரை பற்றி விசாரணை செய்ததில் சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் என தெரிவிந்தார். அவரிடம் என்னையும், காவல் ஆய்வாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை விசாரித்த போது அவர் தனது பெயர் T.சீனுவாசன், வயது 56, த/பெ தியாகராஜன், சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் என்றும், தான் 01.11.2022 முதல் சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்துவருவதாக தெரிவித்தார். அவரிடம் நான் அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்ய இருக்கும் விவரத்தை தெரிவித்து அவரை சோதனை முடியும் வரை சோதனை குழுவினருடன் உடனிருக்க கேட்டுக்கொண்டேன். அவரும் சம்மதம் தெரிவித்து உடன் இருந்தர். பின்னர் நான் அவரது அறையினை சோதலை செய்தேன். அவரது மேஜையில் 6 டிராயர் இருந்தது அதனை சோதனை செய்ததில் அதில் ஆவணங்கள் மற்றும் பேப்பர்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்து. மேலும் மேற்படி மேஜையின் கீழே தரையில் இரண்டு வெள்ளை கவர்கள் ரப்பர்பேண்டு போட்டு இருந்தன. அதனை எடுத்து பிரித்து பார்த்ததில் கத்தையாக பணம் இருந்தது. அதனை எண்ணிப்பார்த்ததில் 500 x 100 = 50,000/- மும், மற்றொரு கவரில் இருந்த பணத்தை எண்ணிப்பார்த்ததில் 500 x 100 = 50,000/- மும் இருந்தது. மேலும் செயல் அலுவலர் திரு.சீனுவாசன் திரேக சோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பாக்கெட்டில் வெள்ளை கவர் இருந்தது. அதனை எடுத்து சோதனை செய்ததில் அதில் 500 x 10 = 5000/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க அவர் சரியான முகாந்திரம் கூறாததாலும், மேலும் மேற்படி பணம் வெள்ளை கவரில் ரப்பர் போட்டு மேஜைக்கு அடியில் மறைத்து வைத்துள்ளதால், உதவி இயக்குநர், தணிக்கை, கடலூர் மற்றும் ஆய்வாளர் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க

அ. [signature]
25/4/24

வைத்திருந்த பணம் என நம்புவதற்கான போதிய முகாந்திரம் உள்ளதால் மேற்படி ரூ.1.05.000/–த்தை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் செயல் அலுவலர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டை சோதனை செய்ததில் அவர் தனது மணிபர்சில் 500 x 4, 200 x 1, 100 x 3 ஆக மொத்தம் ரூ.2,500/– வைத்திருந்தார். மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ. 2,500/– ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறைக்கை தெற்கே உள்ள அறையை சோதனை செய்ததில் அங்கு நாற்காலியில் அமர்ந்திருந்த நபரை விசாரித்ததில் அவர் தனது பெயர் P.பூங்குழலி, வயது 55, க/பெ V.கணேசன், உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர் என்றும் தான், சேத்தியாதோப்பு தேர்நிலை பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற உள்ளூர் தணிக்கை மேலாய்வு செய்ய வந்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவர் வைத்திருந்த கைப்பையில் 500 x 1, 200 x 2, 100 x 1, என மொத்தம் ரூ. 1000/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.1000/––ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அந்த அறைக்கு கிழக்கு பக்கத்தில் உள்ள அறையில் மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் P.செல்வராஜ், வயது 55, த/பெ.பட்டுசாமி, குடிநீர் திட்ட உதவியாளர் என்று தெரிவித்தார். அவரை திரேக சோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த பேண்ட் பாக்கெட்டில் 4 x 500 = ரூ.2,000/– பணம் இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.2000/––ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையில் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த நாள்காலியில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் D.கஸ்தூரி, வயது 45, க/பெ.சுரேஷ்குமார், மோட்டார் இயக்குபர், சேத்தியாதோப்பு என்றும், தான் செயல் அலுவலரின் உத்திரவின் பேரில் இவ்வலுவலகத்தில் எழுத்து வேலைக்காக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவர் வைத்திருந்த கைப்பையில் பணம் படித்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 500 x 9, 100 x 5, என மொத்தம் ரூ. 5000/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம்

அ.கி 25/4/24

கூறாததால் மேற்படி பணம் ரூ.5000/—–ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அறையின் வடக்கு திசையில் கண்ணாடியில் ஆன கணினி அறை இருந்தது. அதில் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க தனது பெயர் G.விஜயலட்சுமி, வயது 43, ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர் என்றும், தான் சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் 2022 – 2023 நிதி ஆண்டிற்கான தணிக்கையினை கடந்த 11.03.2024 முதல் 23.03.2024 வரை வருடாந்திர உள்ளாட்சி நிதி தணிக்கை செய்ததாகவும், இன்று மேற்படி தணிக்கையினை உதவி இயக்குநர் அவர்கள் மேலாய்வு செய்வதற்காக அவருடன் வந்ததாகவும், தெரிவித்தார். அவரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவர் வைத்திருந்த கைப்பையில் பணம் படித்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 100 x 2. 50 x 2, என மொத்தம் ரூ. 300/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்ததால் அவரிடம் ரூ. 300/– திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அருகில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க அவர் தனது பெயர் S.புவனேஸ்வரி (வயது 30), த/பெ.செல்வராசு என்றும், தான் திடக்கழிவு மேலாண்மை சுயஉதவிக்குழுவில் கடந்த மூன்று வருடங்களாக உறுப்பினராக உள்ளதாகவும், ஆனால் சேத்தியா தோப்பு பேரூராட்சி அலுவலகத்தில் கணினி இயக்குவது, பிறப்பு இறப்பு விவரங்கள் கணினியில் பதிவேற்றம் செய்வது மற்றும் சொத்துவரி, குடிநீர் வரி வசூல் செய்வது போன்ற பணிகளை செய்து வருவதாகவும், தன்னைப்போன்றே மற்றொரு உறுப்பினரான ராஜ்குமார் என்பவரும், இதே அலுவலகத்தில் அலுவலக பணிபுரிந்துவருவாகவும் தெரிவித்தார். மேலும் அவரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவர் வைத்திருந்த கைப்பையில் பணம் மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பார்க்க 500 x 9. என மொத்தம் ரூ. 4500/– இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க சரியான முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.4500/—–ஐ விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது மேஜையின் மீது இருந்த ஒரு பிளாஸ்டிக் டப்பாவில் பணம் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.3136/– இருந்தது. மேற்படி பணம் பற்றி விசாரிக்க அவர் இன்றைய தேதி 24.04.2024 யில் சொத்து வரியாக வசூலிக்கப்பட்ட

அ. [signature]
25/4/24

பணம் என தெரிவித்து அதற்கான இரசீதினை எடுத்து காண்பித்தார். அதனை பார்வையிட்டதில் 1) வரி விதிப்பு எண்.1726ல் ஜி.வைத்தியநாதன் என்பவர் பெயரில் ரூ.1250/- 2) வரி விதிப்பு எண்.1720ல் ஜி.வைத்தியநாதன் என்பவர் பெயரில் ரூ.686/- வரி 3) விதிப்பு எண்.164ல் ஜி.வைத்தியநாதன் என்பவர் பெயரில் ரூ.1200/- ஆகமொத்தம் இன்றைய தேதியில் ரூ.3136 சொத்து வரியாக வசூலிக்கப்பட்டுள்ளது என தெரியவருவதால், மேற்படி பணத்தை அரசு பணம் என்பதால் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவருக்கு அருகில் இருந்த நபரை விசாரிக்க, அவர் தனது பெயர் S.வைஷ்ணவி (வயது 30), க/பெ.செல்வராசு என்றும், கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல் முறை ஆணையின்படி கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை கணினி இயக்குபவராக இவ்வலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், தனது கணவர் செல்வராசு இதே அலுவலகத்தில் குடிநீர் திட்ட உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை பெண் காவலர் உதவியுடன் சோதனை செய்ததில் அவர் வைத்திருந்த கைப்பையில் பணம் படித்து வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பார்க்க மொத்தம் ரூ.520/- இருந்தது. மேற்படி பணத்தை பற்றி விசாரிக்க தனது சொந்த செலவிற்காக வைத்துள்ளதாக தெரிவித்ததால் அவரிடம் ரூ. 520/- திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இவருக்கு இவ்வலுவலகத்தில் வருகைப் பதிவேடு தனது கிடையாது என்று தெரிவித்தார். மேற்படி அலுவலகத்தின் போர்ட்டிகோவில் நிறுத்தப்பட்டிருந்த TN14Y0084 என்ற பதிவெண் கொண்ட Innova Crysta வாகனம் பற்றி விசரிக்க அந்த வாகனம் செயல் அலுவலர் திரு.சீனுவாசன் அவர்கள் வந்த கார் என்று தெரிவித்தார். அந்த காரை சோதனை செய்ய அதில் கைப்பற்றக்கூடிய பொருளோ அல்லது ஆவணங்களோ இல்லை. அதேபோல் நிருத்தப்பட்டிருந்த PY05J7138 என்ற பதிவெண் கொண்ட Honda City வாகனம் பற்றி விசரிக்க அந்த வாகனம் கடலூர் உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் திருமதி.பூங்குழலி அவர்கள் வந்த கார் என்று தெரிவித்தார். அந்த காரை சோதனை செய்ய அதில் கைப்பற்றக்கூடிய பொருளோ அல்லது ஆவணங்களோ இல்லை. மேற்சொன்ன ஆய்வின்போது கண்டெடுக்கப்பட்ட பணம் ரூ.1,20,000/-ஐ லஞ்சப்பணம் என கருதுவதற்கு தகுந்த முகாந்திரம் இருந்தது. மேலும், எனது விசாரணையில் அவர்கள்

அ.[signature] 25/4/24

தாங்கள் வைத்திருந்த பணத்திற்கான சட்டப்பூர்வமான முகாந்திரம் எதனையும் கூறாததால், மேற்படி கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.1,20,000/–த்தை விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும். 1) கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி 2024ம் ஆண்டு வரித்தண்டலர் மற்றும் குடிநீர்திட்ட பணியாளர்கள் வருகை பதிவேடு, 2) Cuddalore District Sethiyathope Town Panchayat Estimate and Allotment Register 2021 – 2022 to 3) கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி மன்ற அமர்வுப்படி பதிவேடு, 4) கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி தலைவர், துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வருகை பதிவேடு 5) கடலூர் மாவட்டம், சேத்தியாத்தோப்பு பேரூராட்சி மன்ற தீர்மான பதிவேடு 2022 ம் ஆண்டு முதல் ஆகிய பதிவேடுகள், 6) Abstract of Income and Expenditure account for the year 2023 – 2024. 7) Bank Payment Voucher details for the month April–2023 to Februaruy–2024. 8) Trial Balance for the year 2023 – 2024. 9) Tax collection 2023 – 2024. 10) Register for Chequest Received 2023–2024 ஆகியவை மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்கண்ட கண்டுபிடிக்கப்பட்ட பணம் ரூ.1,20,000/– செயல் அலுவலருக்கு யாரால் கொடுக்கப்பட்டது என்பதையும் மற்றும் பிற சந்தேக பணப் பரிமாற்றங்கள் ஏதேனும் இருந்துள்ளதா என்று குறித்துக் கண்டறிய சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் இயங்கிவந்த CCTV–ன் HIKVISION என்ற பெயர் கொண்ட DVR விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் ஆய்வின் போது சேத்தியாதோப்பு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.T.சீனுவாசன், கடலூர், உள்ளாட்சி நிதி தணிக்கை, உதவி இயக்குநர் திருமதி P.பூங்குழலி, கடலூர், உள்ளாட்சி நிதி தணிக்கை, ஆய்வாளர் திருமதி G.விஜயலட்சுமி, கணினி இயக்குபவர் திருமதி. S.வைஷ்ணவி, திடக்கழிவு மேலாண்மை சுயஉதவிக்குழு உறுப்பினர் திருமதி. S.புவனேஸ்வரி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் ஆய்வு குழு சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு எந்தவித மன

உளைச்சலை ஏற்படுத்தும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திமர் ஆய்வு மகஜரை சம்பவ இடத்திலேயே மாலை சுமார் 4.00 மணிக்கு துவக்கப்பட்டு இரவு சுமார் 9.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி திமர் ஆய்வில் இருந்தும், சம்பவங்களில் இருந்தும், சேத்தியாதோப்பு தேர்வு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் 24.04.2024 ஆம் தேதி கடலூர் மாவட்ட உள்ளாட்சி நிதி தணிக்கை உதவி இயக்குநர் திருமதி.பெ.பூங்குழலி மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை ஆய்வாளர் திருமதி.R.விஜயலட்சுமி ஆகியோர்கள் நிதி தணிக்கை மேலாய்வு பணி மேற்கொண்டனர் என்பதும், அவர்கள் மேற்கொள்ளும் மேலாய்வு பணியினை சுமூகமாக முடிப்பதற்கு சட்டத்திற்கு புறம்பாக பணம் கேட்டுள்ளனர் என்பதும், அதன்படி சேத்தியாதோப்பு தேர்வு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.தி.சீனிவாசன் என்பவர் உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக ரூ.1,20,000/– வைத்திருந்தது என தெரியவருதால், மேற்படி 1) திரு.தி.சீனிவாசன், த/பெ தியாகராஜன், செயல் அலுவலர், தேர்வுநிலை பேரூராட்சி, சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம், 2) திருமதி.பெ.பூங்குழலி, த/பெ பெரியசாமி, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர், கடலூர் மாவட்டம், 3) திருமதி.R.விஜயலட்சுமி, க/பெ ஞானப்பிரகாசம், ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர், கடலூர் மாவட்டம் ஆகியோர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடிவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 24.04.2024 ஆம் தேதி எனது தலையிலான திமர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.1,20,000/–. 1) திரு.தி.சீனிவாசன், த/பெ தியாகராஜன், செயல் அலுவலர், தேர்வுநிலை பேரூராட்சி, சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம், 2) திருமதி.பெ.பூங்குழலி, த/பெ பெரியசாமி, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர், கடலூர் மாவட்டம், 3) திருமதி.R.விஜயலட்சுமி, க/பெ ஞானப்பிரகாசம், ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, கடலூர், கடலூர் மாவட்டம், 4) திருமதி.செ.வைஷ்ணவி, க/பெ செல்வராசு, கணிணி ஆபரேட்டர்(தற்காலிக பணியாளர்), செயல் அலுவலர் அலுவலகம், தேர்வுநிலை பேரூராட்சி, சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம், 5) திரு.செ.புவனேஸ்வரி, த/பெ செல்வராசு, கணிணி ஆபரேட்டர்(தற்காலிக பணியாளர்), செயல் அலுவலர் அலுவலகம், தேர்வுநிலை பேரூராட்சி, சேத்தியாதோப்பு, கடலூர் மாவட்டம்

அ. [signature] 25/4/24

ஆகியோரது வாக்குமூலங்கள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட அசல் திமர் ஆய்வு மகஜர் ஆகியவற்றுடன் இன்று 25.04.2024 ஆம் தேதி காலை 11.45 மணிக்கு, கடலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தங்களிடம் கொடுத்து கொள்கிறேன். அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம் xxxx) 25/04/24 இரா.சுமித்ரா, துணை ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியரகம், கடலூர்.

Sir,

Received the above complaint on 25.04.2024 at about 11.45 hrs., Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.04/2024, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 25.04.2024 at 12.15 hrs., sd/-xxxxx 25.04.2024 (S.Thiruvangadam), Inspector of Police, V & AC, Cuddalore.

அ. [signature]
25/4/24
[S.THIRUVANGADAM]
Inspector of Police,
V & AC, Cuddalore.